| | |
|---|---|
| # FIRST INFORMATION REPORT<br>முதல் தகவல் அறிக்கை<br>(Under Section 154 Cr.P.C.)<br>(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்) | TAMIL NADU POLICE<br>INTEGRATED INVESTIGATION FORM-I<br>C 8093696 |

1. District மாவட்டம் : நாகப்பட்டினம் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை. Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 02/2021 Date: நாள் 25.01.2021

2. (i) Act சட்டம்: CrPC. Sections பிரிவுகள்: 102 CrPC. and 7, 7-A,
(ii) Act சட்டம்: PC Act. Sections பிரிவுகள்: 8 and 12 of the PC Act
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 1988 as amended by the PC (Amendment) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு 24.01.2021 Time from : நேரம் முதல் 16.00 Hrs Time to : நேரம் வரை 21.30 Hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.01.2021 Time : நேரம் 03.00 Hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 15. Km. வடமேற்கு.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி மங்கைநல்லூர்கிராமத்தில், கொத்தமங்க[illegible] திருமருகல் ஒன்றியம், நாகப்பட்டினம் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K.கஜேந்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கிருஷ்ணப்ரசாத்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 55/2021 (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. Dr. P. சொக்கலிங்கம், கால்நடை மருத்துவர் / உதவி இயக்குனர், கால்நடை பராமரிப்புத்துறை, நாகப்பட்டினம். 2. திரு. G. பிரான்சிஸ் மைக்கேல் [illegible], மங்கைநல்லூர் (திருமருகல் ஒன்றியம், மங்கைநல்லூர் ஊராட்சிமன்ற தலைவர் [illegible]). 3. திரு. S. மாதவன், ஊராட்சி செயலர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் உடனடி ஊராட்சி, 1/2 மணி [illegible] ஊராட்சி.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

பணிந்து சமர்பிக்கப்படுகிறது இன்று 25.01.2021 ஆம் தேதி காலை 03.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் M.அருள்பிரியா ஆகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.K.கஜேந்திரன் அவர்கள் கொடுத்த புகார் அறிக்கையின்மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர், திரு.K.கஜேந்திரன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். அய்யா, தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான், இரகசிய தகவலின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு பற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து 24.01.2021 ஆம் தேதி மாலை 16.00 மணி முதல் 21.30 மணி வரை நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, திருமருகல் ஒன்றியம் மருங்கூர் ஊராட்சி பயனாளிகளுக்கு கொத்தமங்கலத்தில் விலையில்லா கறவை பசுக்கள் வழங்கப்பட்டது தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலர்களை கொத்தமங்கலம் ஊராட்சிமன்ற அலுவலகத்தில் வைத்து திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது 1)Dr.P.சொக்கலிங்கம், கால்நடை மருத்துவர்/ உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, நாகப்பட்டினம் என்பவரிடமிருந்து ரூபாய் 1,98,000/- கைப்பற்றப்பட்டது. 2)திரு.G.பிரான்சிஸ் மகேந்திரா,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the investigation / Refused Investigation / transferred to PS ................................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

25/1/2021
K. [signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
25/01/2021

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ....ARUL PRIYA
Rank: நிலை ........................ No. எண் ..........
Inspector of Police,
VSAC, Nagapattinam

**நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2021 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி :-**

மேலத்தெரு, மருங்கூர், (திருமருகல் ஒன்றியம் மருங்கூர் ஊராட்சிமன்ற தலைவி திருமதி.மதிராணி அவர்களின் கணவர்) என்பவரிடமிருந்து ரூபாய் 1,50,000/- கைப்பற்றப்பட்டது. 3)திரு.S.பிரகாஷ்குமார், த/பெ.சிவசுப்பிரமணியன், ஊராட்சி செயலர், வடகரை ஊராட்சி, கூடுதல் பொறுப்பு ஊராட்சி செயலர், மருங்கூர் ஊராட்சி என்பவரிடமிருந்து ரூபாய் 25,000/- கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் ஆய்வின்போது சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடியதாக தெரியவந்த கையூட்டு தொகையானது கொத்தமங்கலம் மந்தைவெளி திடலில் திருமருகல் ஒன்றியம் மருங்கூர் ஊராட்சியில் உள்ள 50 ல் 48 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும்போது ஒவ்வொரு பசுக்களுக்கும் உண்டான அரசு நிர்ணயித்த அதிகபட்ச தொகையான 35,000/- மற்றும் டிரான்ஸ்போர்ட் சார்ஜ் ரூபாய் 2,500/- ஆகியவற்றில் ஒவ்வொரு பசுக்களுக்கும் ரூபாய் 30,000/- மட்டுமே பயனாளிகளுக்கு கொடுத்துவிட்டு, மீதமுள்ள ரூபாய் 7,500/-யை சம்மந்தப்பட்ட மருத்துவர் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக நாகப்பட்டினம் கால்நடை பராமரிப்புத்துறை கால்நடை மருத்துவர்/உதவி இயக்குநர், கால்நடை உதவி மருத்துவர், மருங்கூர் ஊராட்சிமன்றத்தை சேர்ந்தவர்களும் கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்ததாக தெரியவந்த உரிய காரணம் கூறஇயலாத பணம் கையூட்டாக பெற்ற பணம்தான் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலும், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் பெறப்பட்ட கையூட்டு பணம் என்பதன் அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான உரிய காரணம் கூற இயலாத மொத்தப்பணம் ரூபாய். 3,73,000/- திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. இத்திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மேற்படி மொத்தப் பணம் ரூபாய்.3,73,000/- மற்றும் 1)50 பயனாளிகளுக்குண்டான 50 Voucher for purchase of Milch cow(50 Sheets), 2)50 பயனாளிகளுக்குண்டான United India Insurance Co. Ltd Statement of Declarations Cattle Insurance-க்காக தயார் செய்த விபரம்(10 Sheets) மற்றும் 1)Dr.P.சொக்கலிங்கம், கால்நடை மருத்துவர்/உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, நாகப்பட்டினம், 2)திரு.G.பிரான்சிஸ் மகேந்திரா, மேலத்தெரு, மருங்கூர், (திருமருகல் ஒன்றியம் மருங்கூர் ஊராட்சிமன்ற தலைவி திருமதி.மதிராணி அவர்களின் கணவர்), 3)திரு.S.பிரகாஷ்குமார், த/பெ.சிவசுப்பிரமணியன், ஊராட்சி செயலர், வடகரை ஊராட்சி பொறுப்பு ஊராட்சி செயலர், மருங்கூர் ஊராட்சி, 4)Dr.M.முத்துக்குமார், தற்காலி கால்நடை உதவி மருத்துவர், கால்நடை மருந்தகம், திருப்புகலூர், பொறுப்பு திருமருகல், ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். எனவே மேற்படி 1)Dr.P.சொக்கலிங்கம், கால்நடை மருத்துவர்/உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, நாகப்பட்டினம், 2)திரு.G.பிரான்சிஸ் மகேந்திரா, மேலத்தெரு, மருங்கூர், (திருமருகல் ஒன்றியம் மருங்கூர் ஊராட்சிமன்ற தலைவி திருமதி.மதிராணி அவர்களின் கணவர்), 3)திரு.S.பிரகாஷ்குமார், த/பெ.சிவசுப்பிரமணியன், ஊராட்சி செயலர், வடகரை ஊராட்சி பொறுப்பு ஊராட்சி செயலர், மருங்கூர் ஊராட்சி ஆகிய நபர்களின்மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை

எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம்) K.கஜேந்திரன் 25.01.2021. (K.கஜேந்திரன்) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் இன்று 24.01.2021 ஆம் தேதி மாலை சுமார் 16.00 மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, திருமருகல் ஒன்றியம், கொத்தமங்கலம் ஊராட்சி கொத்தமங்கலத்தில் நாகப்பட்டினம் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் அவர்கள் மருங்கூர் ஊராட்சியில் உள்ள பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்கள் வழங்கிய இடத்தை திரு.K.கஜேந்திரன், த/பெ.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.M.அருள்பிரியா மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொண்ட திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து அந்த இடம் பொது இடம் திறந்தவெளி என்பதால் அருகிலுள்ள கொத்தமங்கலம் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தில் வைத்து மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் திரு.K.கஜேந்திரன் அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, திருமருகல் ஒன்றியம், கொத்தமங்கலம் ஊராட்சி கொத்தமங்கலத்தில் நாகப்பட்டினம் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் Dr.P.சொக்கலிங்கம் அவர்களால் கொத்தமங்கலம் பழைய ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடத்திற்கு எதிரேஉள்ள கொத்தமங்கலம் மந்தைவெளி திடலில் திருமருகல் ஒன்றியம் மருங்கூர் ஊராட்சியில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 50 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும்போது ஒவ்வொரு பசுக்களுக்கு உண்டான அரசால் நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச தொகையான ரூபாய் 35,000/- மற்றும் டிரான்ஸ்போர்ட் சார்ஜ் ரூபாய் 2,500/- ஆகியவற்றில் ஒவ்வொரு பசுக்களுக்குமாக பயனாளிகளுக்கு ரூபாய் 30,000/- மட்டுமே பசுமாட்டின் விளையாக கொடுத்துவிட்டு, ரூபாய் 7,500/-யை சம்மந்தப்பட்ட மருத்துவர் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக கையூட்டு பெறுவதாக நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைக்க பெற்ற இரகசியதகவல்களின் அடிப்படையில், இன்று 24.01.2021 ஆம் தேதி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் அவர்களுக்கு தகவல் தெரிவித்ததன் அடிப்படையில், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் இன்று 24.01.2021 ஆம் தேதி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சுமார் 14.00 மணிக்கு வந்தும், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 24.01.2021 ஆம் தேதி மாலை சுமார் 15.00 மணிக்கு இரண்டு அரசு வாகனத்தில் புறப்பட்டு நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, திருமருகல் ஒன்றியம், கொத்தமங்கலம் ஊராட்சி கொத்தமங்கலம் கிராமத்திற்கு சுமார் 16.00 மணிக்கு வந்தும், மேற்படி நாகப்பட்டினம் விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் நாகப்பட்டினம் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் Dr.P.சொக்கலிங்கம் அவர்கள் கொத்தமங்கலம் பழைய ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடத்திற்கு எதிரே உள்ள கொத்தமங்கலம் மந்தைவெளி திடலில் திருமருகல் ஒன்றியத்திற்குட்பட்ட மருங்கூர் ஊராட்சியில் தேர்வுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட

பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்கள் வழங்கிவிட்டு புறப்பட தயாராக இருந்தவர்களிடம் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி சம்பவ இடமான நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, திருமருகல் ஒன்றியம், கொத்தமங்கலம் ஊராட்சி கொத்தமங்கலத்தில் நாகப்பட்டினம் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் Dr.P.சொக்கலிங்கம் அவர்கள் விலையில்லா கறவை பசுக்கள் வழங்கிய இடமானது திருமருகல் ஒன்றியம் கொத்தமங்கலம் ஊராட்சி கொத்தமங்கலம் பழைய ஊராட்சி மன்ற கட்டிடத்திற்கு எதிரே மந்தைவெளி திடல் அமைந்துள்ளது. மேற்படி மந்தைவெளி திடலுக்கு மேற்கே குழந்தைகள் நல காப்பகமும், காப்பகத்திற்கு பின்புறம் சிவன் கோவிலும் மேற்படி மந்தைவெளி திடலுக்கு கிழக்கே அறிஞர் அண்ணா நூலக கட்டிடமும், மேற்படி நூலக கட்டிடத்திற்கு பின்புறம் காளியம்மன் கோவிலும், அதனை அடுத்து ஒரு குளமும், காளியம்மன் கோவிலுக்கு மேற்கே வாட்டர் டேங்கும் உள்ளது. மேற்படி கொத்தமங்கலம் பழைய ஊராட்சி மன்ற கட்டிடத்திற்கு எதிரே கிழக்கு மேற்காக செல்லும் திட்டச்சேரி To TR பட்டினம் செல்லும் தார்சாலையுமாக உள்ளது. மேற்படி மந்தைவெளி திடல் அண்ணா நூலகம் அருகே கால்நடைதுறை அலுவலர்கள், அரசு ஊழியர்கள், பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் இருந்தனர். மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்தபோது, மேற்படி இடத்தில் நின்று கொண்டிருந்த சில நபர்கள் அவரவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினரின் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும் விஜிலென்ஸ் குழுவினரின் உதவியுடன் மேற்படி இடம் பொது இடம் என்பதாலும் போதிய வசதிகள் இல்லாமல் இருந்ததாலும், மேற்படி இடத்திலிருந்த 1)Dr.P.சொக்கலிங்கம், கால்நடை மருத்துவர்/உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, நாகப்பட்டினம், 2)திரு.G.பிரான்சிஸ் மகேந்திரா, த/பெ.கோவிந்தசாமி, மேலத்தெரு, மருங்கூர், (திருமருகல் ஒன்றியம் மருங்கூர் ஊராட்சிமன்ற தலைவி திருமதி.மதிராணி அவர்களின் கணவர்), 3)திரு.S.பிரகாஷ்குமார், த/பெ.சிவசுப்பிரமணியன், ஊராட்சி செயலர், வடகரை ஊராட்சி பொறுப்பு ஊராட்சி செயலர், மருங்கூர் ஊராட்சி, 4)Dr.M.முத்துக்குமரன், தற்காலிக கால்நடை உதவி மருத்துவர், கால்நடை மருந்தகம், திருப்புகலூர், பொறுப்பு திருமருகல், 5)Dr.G.கோமதி, ஒப்பந்த கால்நடை உதவி மருத்துவர், கால்நடை மருந்தகம், ஏனங்குடி பொறுப்பு, திட்டச்சேரி, 6)திருமதி.N.சாந்தி, கால்நடை ஆய்வாளர், கால்நடை மருந்தகம், திருமருகல், 7)திரு.M.கார்த்திகேசன், கால்நடை பராமரிப்பு உதவியாளர், கால்நடை மருந்தகம், திருமருகல், 8)திரு.S.வெற்றிநாதன், கால்நடை பராமரிப்புத்துறை துணை இயக்குநரின் ஒப்பந்த ஊர்தி ஓட்டுநர், நாகப்பட்டினம், அண்ணாநகர், செம்பியன்மகாதேவி ஆகியோரை அருகில் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்திலிருந்த கொத்தமங்கலம் ஊராட்சி மன்ற அலுவலக புதிய கட்டிடத்திற்கு அழைத்து வந்து சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனையில் கீழ்கண்ட நபர்கள் வைத்திருந்து ஆஜர் செய்த தொகைகள் சரியான முகாந்திரம் கூறிய தொகை எனத்தெரிய வந்ததால் அந்தத் தொகை சம்மந்தப்பட்ட நபர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது, சரியான முகாந்திரம் கூற

இபலாத சந்தேகத்துடன் கூடியதாக தெரியவந்த கையூட்டு தொகையானது கொத்தமங்கலம் மந்தைவெளி திடலில் திருமருகல் ஒன்றியம் மருங்கூர் ஊராட்சியில் உள்ள 50 ல் 48 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும்போது ஒவ்வொரு பசுக்களுக்கும் உண்டான அரசு நிர்ணயித்த அதிகபட்ச தொகையான 35,000/- மற்றும் டிரான்ஸ்போர்ட் சார்ஜ் ரூபாய் 2,500/- ஆகியவற்றில் ஒவ்வொரு பசுக்களுக்கும் ரூபாய் 30,000/- மட்டுமே பயனாளிகளுக்கு கொடுத்துவிட்டு, ரூபாய் 7,500/-யை சம்மந்தப்பட்ட மருத்துவர் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக நாகப்பட்டினம் கால்நடைபராமரிப்புத்துறை கால்நடை மருத்துவர்/உதவி இயக்குநர், கால்நடை உதவி மருத்துவர், மருங்கூர் ஊராட்சிமன்றத்தை சேர்ந்தவர்களும் கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த உரிய காரணம் கூறஇபலாத பணம் கையூட்டு பணம் என்பதன் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய்.3,73,000/-ம் திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர், பதவிமற்றும் முகவரி | திரும்ப ஒப்படைக்கப்பட்ட தொகை (ரூபாய்) | கைப்பற்றப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | Dr.P.சொக்கலிங்கம், கால்நடை மருத்துவர்/ உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, நாகப்பட்டினம். | 3,040 | 1,98,000 |
| 2 | திரு.G.பிரான்சிஸ் மகேந்திரா, மேலத்தெரு, மருங்கூர், (மருங்கூர் ஊராட்சிமன்ற தலைவி திருமதி.மதிராணி அவர்களின் கணவர்) | 200 | 1,50,000 |
| 3 | திரு.S.பிரகாஷ்குமார், த/பெ.சிவசுப்பிரமணியன், ஊராட்சி செயலர், வடகரை ஊராட்சி பொறுப்பு ஊராட்சி செயலர், மருங்கூர் ஊராட்சி | 500 | 25,000 |
| 4 | Dr.M.முத்துக்குமரன், தற்காலி கால்நடை உதவி மருத்துவர், கால்நடை மருந்தகம், திருப்புகலூர், பொறுப்பு திருமருகல் | 60,270 | - |
| 5 | Dr.G.கோமதி, ஒப்பந்த கால்நடை உதவி மருத்துவர், கால்நடை மருந்தகம், ஏனங்குடி பொறுப்பு, திட்டச்சேரி | 200 | - |
| 6 | திருமதி.N.சாந்தி, கால்நடை ஆய்வாளர், கால்நடை மருந்தகம், திருமருகல் | 40 | - |
| 7 | திரு.M.கார்த்திகேசன், கால்நடை பராமரிப்பு உதவியாளர், கால்நடை மருந்தகம், திருமருகல் | 530 | - |
| 8 | திரு.S.வெற்றிநாதன், ஒப்பந்த ஊர்தி ஓட்டுநர், நாகப்பட்டினம். | 3,610 | - |
| | மொத்தம் | **68,390** | **3,73,000** |

திடீர் சோதனையின்போது Dr.P.சொக்கலிங்கம், கால்நடை மருத்துவர்/ உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, நாகப்பட்டினம் என்பவரின் பர்ஸிலும், அவரது அரசு Bolero நான்கு சக்கர வாகனம் TN51 G0698 என்ற வாகனத்தின் முன்பக்க டேஷ்போர்டிலும் மொத்தமாக ரூபாய் 2,01,040/- காணப்பட்டது. அவர் சரியான முகாந்திரம் கூறிய அவரது பர்ஸிலிருந்து எடுக்கப்பட்ட ரூபாய் 3,040/- சொந்தபணம் என்பதால் அதை Dr.P.சொக்கலிங்கம் என்பவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அவரது அரசு Bolero நான்கு சக்கர வாகனம் TN51 G0698 என்ற வாகனத்திலிருந்து கைப்பற்றப்பட்ட மொத்தப்பணத்தில் ரூபாய் 1,98,000/- இன்றைய தினம் கொடுக்கப்பட்ட அரசு விலையில்லா கறவை பசுக்களுக்காக 48 பயனாளிகளுக்கு கொடுத்ததில் அவர்களுக்குண்டான போக்குவரத்து செலவு தொகை மற்றும் பயனாளிகளிடம் பிடித்தம் செய்யப்பட்ட தொகைதான் தான் என்று கூறியதால், மேற்படி ரூபாய் 1,98,000/- குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்பதன் அடிப்படையில் ரூபாய் 1,98,000/- மட்டும் திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.G.பிரான்சிஸ் மகேந்திரா, மேலத்தெரு, மருங்கூர், (திருமருகல் ஒன்றியம் மருங்கூர் ஊராட்சிமன்ற தலைவி திருமதி.மதிராணி அவர்களின் கணவர்) என்பவர் அவரது மேல் சட்டை பாக்கெட்டிலிருந்து ரூபாய் 200/- மற்றும் இடுப்பு வேஷ்டியின் இடையிலிருந்து ரூபாய் 1,50,000/- ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். அவர் சரியான முகாந்திரம் கூறிய அவரது மேல் சட்டை பாக்கெட்டிலிருந்து எடுக்கப்பட்ட சொந்தப்பணம் ரூபாய் 200/- திரு.G.பிரான்சிஸ் மகேந்திரா என்பவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. தனது மனைவி மருங்கூர் ஊராட்சிமன்ற தலைவி என்றும், மீதமுள்ள ரூபாய் 1,50,000/- இன்றைய தினம் கொடுக்கப்பட்ட அரசு விலையில்லா கறவை பசுக்கள் கொடுக்கப்பட்டதில் ஒரு பயனாளிக்கு ரூபாய் 3,000 என்பதன் அடிப்படையில் 50 பயனாளிகளுக்கும் சேர்த்து மொத்தம் ரூபாய் 1,50,000/-யை பயனாளிகளிடமிருந்து கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த பணம் எனத்தெரியவந்ததால், மேற்கண்ட பணம் ரூபாய் 1,50,000/- மட்டும் திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திரு.S.பிரகாஷ்குமார், த/பெ.சிவசுப்பிரமணியன், ஊராட்சி செயலர், வடகரை ஊராட்சி, கூடுதல் பொறுப்பு ஊராட்சி செயலர், மருங்கூர் ஊராட்சி என்பவர் அவரது சட்டை பாக்கெட்டிலிருந்து ரூபாய் 500 மற்றும் பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூபாய் 25,000/-ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். அவர் சரியான முகாந்திரம் கூறிய அவரது மேல் சட்டை பாக்கெட்டிலிருந்து எடுக்கப்பட்ட சொந்தப்பணம் ரூபாய் 500/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் தான் மருங்கூர் ஊராட்சிமன்ற செயலராக கூடுதல் பொறுப்பில் இருப்பதாகவும், மீதமுள்ள ரூபாய் 25,000/- இன்றைய தினம் கொடுக்கப்பட்ட அரசு விலையில்லா கறவை பசுக்கள் கொடுக்கப்பட்டதில் ஒரு பயனாளிக்கு ரூபாய் 500 என்பதன் அடிப்படையில் 50 பயனாளிகளுக்கும் சேர்த்து மொத்தம் ரூபாய் 25,000/-யை பயனாளிகளிடமிருந்து கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த பணம் எனதெரியவந்ததால் மேற்கண்ட பணம் ரூபாய் 25,000/- மட்டும்

திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. Dr.M.முத்துக்குமரன், தற்காலி கால்நடை உதவி மருத்துவர், கால்நடை மருந்தகம், திருப்புகலூர், பொறுப்பு திருமருகல் என்பவர் அவரது மேல்சட்டை பாக்கெட் மற்றும் அவரது பேக்கில் மொத்தம் ரூபாய் 60,270/- ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். அவர் சரியான முகாந்திரம் கூறிய அவரது மேல் சட்டை பாக்கெட்டிலிருந்து எடுக்கப்பட்ட ரூபாய் 270/- அவரது சொந்தப்பணம் என்றதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவரது பேக்கிலிருந்து எடுக்கப்பட்ட பணம் பற்றி விசாரிக்க, விலையில்லா கறவை பசுக்களுக்காக 48 பயனாளிகளுக்கு கொடுத்தது போக மீதமுள்ள 2 பயனாளிகளுக்கு வழங்கவேண்டிய பணம் என்றும் தனியாக இரண்டு கட்டுகளாக இருந்த தலா ரூபாய் 30,000 என மொத்தம் 60,000 ரூபாய் வைத்திருந்ததாக கூறினார். அதனால் 2 பயனாளிகளுக்கு 2 கறவை பசுக்களுக்கான கொடுக்கவேண்டிய பணம் என தெரிவித்ததால் அந்த பணம் ரூபாய் 60,000/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவர் இன்று கொடுத்த இலவச கறவை பசுக்களுக்கு நாகப்பட்டினம் கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குநர் சொக்கலிங்கம் அவர்களது உத்தரவுப்படி தாங்கள் 1 மாட்டிற்கு ரூபாய் 35,000/-த்திற்கு பதிலாக ரூபாய் 30,000/- மட்டும் பணம் கொடுத்தோம் என்றும், பிடித்தப்பணத்தில் ஒரு பகவிற்கு ரூபாய் 4,500/- என்ற அடிப்படையில் மொத்தம் 50 பசுக்களுக்கும் சேர்த்து நாகப்பட்டினம் கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குநர் சொக்கலிங்கம் அவர்களிடம் கொடுத்துவிட்டோம் என்றும் தெரிவிக்கிறார். மேற்படி திடீர் ஆய்வின்போது இன்றைய தினம் வழங்கப்பட்ட விலையில்லா கறவை பசுக்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் பதிவேடுகள்/ஆவணங்கள் பற்றி மேற்படி கால்நடை பராமரிப்புதுறை அலுவலர்களிடம் கேட்டபோது, 1)50 பயனாளிகளுக்குண்டான 50 Voucher for purchase of Milch cow(50 Sheets), 2)50 பயனாளிகளுக்குண்டான United India Insurance Co. Ltd Statement of Declarations Cattle Insurance-க்காக தயார் செய்த விபரம்(10 Sheets)ஆகியவற்றை ஆஜர் செய்ய, மேற்படி 2 ஆவணங்கள் மற்றும் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்பதன் அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய்.3,73,000/- ஆகியவை இந்த திடீர் ஆய்வு செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் ஆய்வின்போது மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் அவர்கள் 1)Dr.P.சொக்கலிங்கம், கால்நடை மருத்துவர்/உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, நாகப்பட்டினம், 2)திரு.G.பிரான்சிஸ் மகேந்திரா, மேலத்தெரு, மருங்கூர், (திருமருகல் ஒன்றியம் மருங்கூர் ஊராட்சிமன்ற தலைவி திருமதி.மதிராணி அவர்களின் கணவர்), 3)திரு.S.பிரகாஷ்குமார், த/பெ.சிவசுப்பிரமணியன், ஊராட்சி செயலர், வடகரை ஊராட்சி பொறுப்பு ஊராட்சி செயலர், மருங்கூர் ஊராட்சி, 4)Dr.M.முத்துக்குமரன், தற்காலி கால்நடை உதவி மருத்துவர், கால்நடை மருந்தகம், திருப்புகலூர், பொறுப்பு திருமருகல் ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 24.01.2021 ஆம் தேதி இரவு 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகளின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம்

இடப்பட்டுள்ளது. பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இன்று 25.01.2021 ஆம் தேதி காலை 03.00 மணிக்கு மேற்படி புகாரைப்பெற்று நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.02/2021, U/s. 102 Cr.P.C and Sections 7, 7-A, 8 and 12 of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption(Amendment) Act 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

(M.ARULPRIYA),
காவல் ஆய்வாளர், 25/01/2021
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அறிக்கை, திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள், எதிரிகள் 1)Dr.P.சொக்கலிங்கம், கால்நடை மருத்துவர்/உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை, நாகப்பட்டினம், 2)திரு.G.பிரான்சிஸ் மகேந்திரா, மேலத்தெரு, மருங்கூர், (திருமருகல் ஒன்றியம் மருங்கூர் ஊராட்சிமன்ற தலைவி திருமதி.மதிராணி அவர்களின் கணவர்), 3)திரு.S.பிரகாஷ்குமார், த/பெ.சிவசுப்பிரமணியன், ஊராட்சி செயலர், வடகரை ஊராட்சி பொறுப்பு ஊராட்சி செயலர், மருங்கூர் ஊராட்சி, மற்றும் சாட்சி Dr.M.முத்துக்குமரன், தற்காலி கால்நடை உதவி மருத்துவர், கால்நடை மருந்தகம், திருப்புகலூர், பொறுப்பு திருமருகல், நாகப்பட்டினம் மாவட்டம் என்பவர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

(M.ARULPRIYA),
காவல் ஆய்வாளர், 25/01/2021
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.